நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

சம்பா நெல் வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம்

First Published : 01 Nov 2010 02:55:47 PM IST

நாகர்கோவில், அக். 31: சம்பா நெல் வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து மத்திய அரசு நிறுவனமான அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட் மண்டல மேலாளர் அன்பரசு சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

இந்த ஆண்டு சம்பா நெல் பயிர்க் கடன் பெறா விவசாயிகள், காப்பீட்டுத் திட்டத்தில் சேர்வதற்கான கடைசி நாள் டிச. 15 என்றாலும், வெள்ளம், வறட்சி என முன் கூட்டியே தெரிந்தால் முன் கூட்டியே பிரிமியம் செலுத்துவது நிராகரிக்கப்படும். எனவே, வங்கிகளும் (கூட்டுறவு, வர்த்தகம்) விவசாயிகளும் நேரம் தாழ்த்தாமல் இத்திட்டத்தில் உடனே சேருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சம்பா நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு சாதாரண பிரிமியம் 55 சதவிகிதம், மானியம் போக சிறுகுறு விவசாயிகளுக்கு 117, 50 சதவிகித மானியம், ஏனைய விவசாயிகளுக்கு 130.

பயிர்க் கடன்பெறா விவசாயிகள் விருப்பத்தின் பேரில் கூடுதல் பிரிமியம் இதனுடன் செலுத்தினால் பலன் அதிகமாக பெறலாம்.

மேலும், விவரங்களுக்கு அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், மண்டல அலுவலகம், 323, முதல்தளம், ஆந்திரா இன்சூரன்ஸ் பில்டிங், தம்புசெட்டித்தெரு, சென்னை-1 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

மிளகு பயிரிடுவோருக்கு 50 சத மானியத்தில் நாற்றுகள்

First Published : 01 Nov 2010 02:17:04 PM IST

ராசிபுரம்,அக். 31: கொல்லிமலை பகுதியில் மிளகு பயிரிடும் விவசாயிகளுக்கு தோட்டக் கலைத் துறை மூலம் 50 சதவீதம் மானிய விலையில் நாற்றுகள் வழங்கப்படும் என கொல்லிமலை தோட்டக் கலைத் துறை உதவி இயக்குனர் சையத் அன்ஷர் பாஷா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

கொல்லிமலை வட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தற்பொது பெய்து வரும் பருவ மழையை பயன்படுத்தி அதிகளவில் மிளகு பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர். அவ்வாறு பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு, தமிழ்நாடு அரசு தோட்டக் கலைத் துறை உயர் தொழில்நுட்ப உற்பத்தி அதிகரிப்பு திட்டத்தின் கீழ், மிளகு நாற்றுகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது.

ஹெக்டேருக்கு தேவையான 2500 மிளகு நாற்றுகள் மற்றும் அத்துடன் 2 கிலோ அசோஸ்பைரில்லம், தலா 4 கிலோ டிரைகோ டெர்மாவிரிடி, பெவிஸ்டின், காப்பர் ஆக்ஸி குளோரைடு ஆகியவற்றுக்கு 7 ஆயிரத்து 500 மானிய விலையில் வழங்கப்படும்.

மேலும், மிளகு நாற்றுகள் மற்றும் மலைப்பகுதியில் பயிரிட தேவைப்படும் காப்பி, சில்வர் ஓக் மற்றும் பலா நாற்றுகள் தோட்டக் கலைத் துறை மூலம் வழங்கப்படுகிறது. மிளகு நாற்றுகள் மற்றும் அதற்கு தேவைப்படும் இதர காப்பி, சில்வர் ஓக் மற்றும் பலா கன்றுகள் பெற கொல்லிமலை, செம்மேடு, படசோலை ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் அதிகளவில் பயன்பெற வேண்டும். மேலும் விபரங்களுக்கு தோட்டக் கலைத் துறை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம்.

## 5,000 பனைமர விதைகள் நடும் பணி தொடக்கம்

First Published : 01 Nov 2010 12:50:15 PM IST

திருவண்ணாமலை, அக். 31: வேங்கிக்கால் ஏரியில் 5 ஆயிரம் பனைமர விதைகள் நடும் பணியை ஆட்சியர் மு.ராஜேந்திரன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

மாவட்டத்தின் வனவளத்தை பெருக்கவும், சுற்றுச்சூழலை காக்கவும் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக அனைத்து ஆற்றங்கரைகளிலும் மாணவ, மாணவியர், தன்னார்வலர்கள் உதவியுடன் மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, வேங்கிக்கால் ஏரியில் 5 ஆயிரம் பனை மர விதைகள் நடும் பணியை ஆட்சியர் மு.ராஜேந்திரன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட வருவாய்

அலுவலர் சி.கதிரவன், ஊராட்சித் தலைவர் ஏ.கே.குமாரசாமி, வேளாண் உதவி இயக்குநர் வடமலை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெல்லம் விலை உயர்ந்தது**

First Published : 01 Nov 2010 12:41:06 PM IST

போச்சம்பள்ளி, அக். 31: தீபாவளியையொட்டி, வெல்லம் விலை உயர்ந்தது.

போச்சம்பள்ளி ஞாயிற்றுக்கிழமை வாரச் சந்தையில், ஒரு கிலோ வெல்லம் |30-க்கு விற்பனையானது. கடந்த வாரம் |20-க்கு விற்பனை செய்யப்பட்டது.

தீபாவளிக்காக, மக்கள் தங்கள் வீடுகளில் அதிரசம் செய்வதற்காக வெல்லம் அதிக அளவில் வாங்குவதால், இதன் விலை உயர்ந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். இதேபோல், கடந்த வாரம் |5 முதல் |6 வரை விற்கப்பட்ட ஒரு தேங்காயின் விலை இந்த வாரம் |7.50-க்கு விற்கப்பட்டது. மேலும், தக்காளி, பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலை குறைந்து காணப்பட்டது.

**நெல்லுக்கு குவிண்டாலுக்கு 2000 வழங்கக் கோரிக்கை**

First Published : 01 Nov 2010 01:35:27 PM IST

திருவாரூர், அக். 31: நெல்லுக்குக் குவிண்டாலுக்கு 2,000 விலை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து முன்னோடி விவசாயி டி. பழனிவேல் கூறியது:

வெள்ளக் காலங்களில் வெள்ள நீரை வெளியேற்றும் வடிகாலாகவே தமிழகத்தை கர்நாடகம் பயன்படுத்தி வருகிறது.

காவிரி நீர் பிரச்னையில் மத்திய அரசும், பிரதமரும் தலையிட்டு, உரிய தீர்வு காண வேண்டும். அணை நிரம்பும் நிலையிலும், தமிழகத்துக்கு தண்ணீர் விட மறுக்கும் கர்நாடகத்தின் போக்கு கண்டிக்கத்தக்கது.

பல்வேறு பிரிவினருக்கும் மத்திய அரசு பல சலுகைகளை அளித்து வருகிறது. ஆனால், விவசாயிகளை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. விவசாய விளைபொருள்கள் உற்பத்தியை மேம்படுத்தவும், ஊக்கப்படுத்தவும் அரசுகள் சார்பில் எந்தவித

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், தொடர்ந்து விவசாயிகள் வறுமைக் கோட்டுக்கு கீழ் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, நெல்லுக்கு குவிண்டாலுக்கு 2,000 விலை வழங்கி கொள்முதல் செய்ய வேண்டும். தரமான விதை மற்றும் இடுபொருள்களை மானிய விலையில் அளித்து, நீர்பாசனத்தை முறைப்படுத்தினால் விவசாயத்தின் மீது விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற்பட்டு, இன்னும் அதிக அளவில் உற்பத்தி நடைபெற வாய்ப்புகள் ஏற்படும் என்றார் பழனிவேல்.

தினமலர்

### 65 ஆயிரம் விவசாயி விபரங்கள் அடங்கிய "வெப்சைட்":மாநிலத்தில் முதல் முறையாக உருவாக்கம்

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2010,01:56 IST

நாமக்கல்: ""மாநிலத்தில் முதன் முறையாக நாமக்கல் மாவட்டத்தில் 65 ஆயிரத்து 450 விவசாயிகளின் விபரங்களை அடங்கிய வெப்சைட் உருவாக்கப்பட்டுள்ளது," என, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் மதுமதி கூறினார். நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கடந்த மாதம் விவசாயிகள் அளித்த மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளுக்கு கலெக்டர் மதுமதி பதிலளித்து பேசியதாவது: மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளி பயிரில் மாவு பூச்சி தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. அதன் காரணமாக மகசூல் குறைவு ஏற்படும் என்றும், அதனால் பாதிக்கப்பட்ட மரவள்ளி விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்யப்பட்டுள்ள விளை நிலங்கள கணக்கெடுப்பு செய்து உண்மையான பாதிப்பு இருக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட

விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கோரி அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் அளிக்கப்படும் மானிய திட்டங்கள் அடங்கிய கையேடு வழங்கப்படும். மோட்டார் பொருத்திய கைத்தெளிப்பான்கள் 50 சதவீத மானியத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில்தான் மாநிலத்தில் முதன் முதலாக 65 ஆயிரத்து 450 விவசாயிகள், அவர்கள் பயிரிட்டுள்ள நிலங்களில் பரப்பு மற்றும் முழு விபரங்கள் அடங்கிய வெப்சைட் உருவாக்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்பில் இடம் பெற்றுள்ள விவசாயிகள் உரிய விபங்களை வெப்சைட்டில் இருந்து தெரிந்து கொள்ளலாம். தற்போது மழை பெய்துவருவதால், மாவட்டங்களில் பெரும்பாலான விளைநிலங்கள் பயிர் செய்ய நேரிடும் என்பதால், விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உரங்கள், விதைகள் அனைத்து டிப்போக்களிடம் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறையை அனைத்து விவசாயிகளும் பின்பற்ற வேண்டும். கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது 15 நாட்களுக்கும் முன் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், டி.ஆர்.ஓ., சீதாலட்சுமி, வேளாண் துறை இணை இயக்குனர் சிவராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜா, துணை இயக்குனர் பிரபாகரன், அரசு அலுவலர்கள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**நெல்நாற்றுகள் காய்ந்து போன பரிதாபம்: முறையான பயிற்சி இல்லாததால் சோகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2010,02:11 IST

இடைப்பாடி: காவிரி ஆற்றில் நிறைய தண்ணீர் இருந்தும் முறையான பயிற்சி இல்லாமல் நெல்நாற்று பயிர்கள் காய்ந்து போனதால், பூலாம்பட்டி பகுதி விவசாயிகள் வேதனையில் உள்ளனர். உயரிய தொழிற்நுட்பத்தை பயன்படுத்தும் விவசாயிகள் பெரும் வேதனைக்கு உள்ளாகி வருகிறார்கள். தமிழகத்தில் நெல் விளைச்சலை அதிகரிக்கவும், விவசாயத்தில் நிலவி வரும் ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்கவும் வேளாண் துறை இயந்திரங்கள் மூலம் விவசாயம் செய்யும் முறையை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக நெல் சாகுபடியில் நெல் நாற்று போடுவது முதல் நெற்கதிர் அடிப்பது வரை இயந்திரங்கள் மிக அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

தற்போது உயர் தொழிற்நுட்பம் மிக அதிக அளவில் பயன்பாட்டுக்கு வந்துள்ள நிலையில் இத் திட்டத்தை செயல்படுத்தும் அலுவலர்கள் அஜாக்கிரதையால் இத்திட்டம் தோல்வி அடையும் நிலை ஏற்பட்டு உள்ளது. சேலம் மாவட்டம் பூலாம்பட்டி பகுதியை சேர்ந்தவர் சதீஷ்குமார்(35). இவருக்கு பூலாம்பட்டி அருகே உள்ள மோளப்பாறை பகுதியில் 6 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த விவசாய நிலத்தில் 3.5 ஏக்கரில் வழக்கமான முறையில் நிலத்தில் நெல் நாற்று விடப்பட்டது.

மீதம் உள்ள 2.5 ஏக்கரில் தமிழக அரசு தற்போது அறிமுகப்படுத்தியுள்ள பிளாஸ்டிக் டிரேக்களில் நாற்று விடும் முறையில் நெல்கள் நாற்றுகள் விடப்பட்டது. நிலத்தில் நாற்று விடப்பட்ட நாற்றுகள் நன்றாக வளர்ந்துள்ள நிலையில், உயரிய தொழிற்நுட்பத்தில் விடப்பட்ட நாற்றுகள் ஒரே வாரத்தில் கருகி விட்டது. பூலாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் சார்பாக இந்த நெல் நாற்றுகள் பராமரிப்பு செய்யப்பட்டு வந்தது. நெல்நாற்றுகள் கருகிறது.

அதை சரிசெய்ய வேண்டும் என விவசாயி சதீஷ்குமார் பூலாம்பட்டி தொடக்க வோளண்மை கூட்டுறவு சங்க அலுவலர்களுக்கும், நெல் நாற்றுகளை பராமரிக்கும் ஆத்தூர் விதைஉற்பத்தி மையத்தில் பயிற்சி பெற்ற அலுவலருக்கும் பலமுறை தகவல் கொடுத்தும் அவர்கள் வராததால் நெல் நாற்று பயிர்கள் கருகி வீணானது. இது குறித்து விவசாயி சதீஷ்குமார் கூறியதாவது: உயர்தொழிற் நுட்பத்தை பயன்படுத்த மற்ற விவசாயிகள் அச்சப்பட்டு வழக்கமான முறையிலேயே விவசாயம் செய்து வருகின்றனர். சரி நாமளாவது இந்த தொழிற்நுட்பம் மூலம் விவசாயம் செய்யலாம் என நினைத்து நானும்  பிளாஸ்டிக் டிரேக்களில் நாற்று விடும் முறையில் நெல்கள் நாற்று விட்டேன்.

அதை பராமரிக்க பூலாம்பட்டி தொடக்க வோளண்மை கூட்டுறவு சங்க அலுவலர், நெல் நாற்றுகளை பராமரிக்கும் ஆத்தூர் விதை உற்பத்தி மையத்தில் பயிற்சி பெற்ற அலுவலர் என இருவர் பராமரிப்பு செய்து வந்தனர். பிளாஸ்டிக் தொழிற்நுட்பத்தில் போடப்பட்ட நெல்நாற்றுகள் கருகுகிறது என பலமுறை கூறியும் எவரும் வரவில்லை. அதிகாரிகளின்

அலட்சியத்தால் பூலாம்பட்டியில் தேவைக்கு அதிகமாக தண்ணீர் இருந்தும் விவசாயம் செய்ய முடியாமல் அவதிப்பட்டு வருகிறேன். தமிழக அரசு இதுபோன்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து என் போன்ற விவசாயிகளுக்கு வரும் துன்பத்தை போக்க வேண்டும், என்றார். விவசாயத்தில் உள்ள ஆட்கள் பற்றாக்குறையை போக்க கொண்டு வரப்பட்ட உயர்தொழிற்நுட்பம் அதிகாரிகளின் அலட்சியத்தால் விவசாயிகள் புறக்கணிக்கும் அவலநிலை ஏற்பட்டு உள்ளது.

**விவசாய தொழில்நுட்பங்கள் முழுமையாக சென்றடையவில்லை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2010,00:48 IST

கோவை : ""விவசாயத்துறையில் உள்ள நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடைவதில்லை. 7 சதவீதத்தினர் மட்டுமே நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர்," என, விவசாயிகளுக்கான பட்ட படிப்பு துவக்க விழாவில், தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். தமிழ்நாடு வேளாண் பல்கலையின் திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்கம் சார்பில் விவசாயிகளுக்கு பண்ணைத் தொழில்நுட்பம் என்ற இளநிலை பட்டப்படிப்பு துவக்க விழா பல்கலை வளாகத்தில் நேற்று நடந்தது. விழாவில், பல்கலை திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்கத்தின் பேராசிரியர் சாந்தி வரவேற்றார். திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்கத்தின் இயக்குனர் வள்ளுவபாரிதாசன் தலைமை வகித்தார். பல்கலை ஆராய்ச்சி மைய இயக்குனர் பரமாத்மா, பதிவாளர் சுப்பையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பட்ட படிப்புக்கான பாடபுத்தகங்களை வெளியிட்டு பேசியதாவது:விவசாயிகள் செய்யும் தொழிலில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், தெளிவு பெறும் வகையிலும் தமிழக விவசாயிகளுக்கு""இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப பட்டபடிப்பு'(பி.எப்.டெக்.,) துவக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் முதல்முறையாக விவசாயிகளுக்காக வழங்கப்படும் முன்னோடி திட்டம். விவசாயிக்கு பட்டதாரி என்ற சமூக அங்கீகாரத்தை பெறும் வகையில் இத்தொழில்நுட்ப பட்ட படிப்பு வழங்கப்பட உள்ளது.அனைவருக்கும் உணவு வழங்க வேளாண் உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தியை பெருக்க புதிய

தொழில்நுட்பங்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும். அவை, விவசாயிகளை சென்றடைய வேண்டும்.

2005ம் ஆண்டு முதல், திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்கம் பல்கலையில் துவக்கப்பட்டு, விவசாயம் சார்ந்த தொழில்நுட்பங்களை அனைவரும் எளிமையாக படித்து பயன்பெற படிப்புகளை பல்கலை வழங்குகிறது. இந்தாண்டு முதல் விவசாயிகளுக்கு சர்வதேச அளவில் ஒரு முன்னோடி திட்டமாக பி.எப்.டெக்., பட்டபடிப்பு துவக்கப்பட்டுள்ளது. கல்வி பாடங்கள் அனைத்தும் பல்கலையின் விஞ்ஞானிகளால் அனைவரும் எளிய முறையில் படித்து புரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. தேவை ஏற்பட்டால் தெளிவுபடுத்த படங்களும் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளன.வேளாண்சார் தொழில்களை கற்றுக்கொடுப்பதன் மூலம் விவசாயிகள் தொழில்முனைவோராக உருவாக்க முடியும்;வேளாண் சார்ந்த தொழில்கள் பெருக வாய்ப்பு அளிக்கப்படும்.

இப்பாடங்களில் செயல்முறை விளக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு செயல்முறை விளக்கங்களில் பயிற்சியாளர்கள் நேரடியாக ஈடுபடுத்தப்படுவர். இப்பட்டம் விவசாயிகளுக்கு தன்னம்பிக்கை அளிப்பதுடன், விவசாயத்தில் அதிகப்படியான ஈடுபாட்டையும் ஏற்படுத்தும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

இப்பாடத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு தரமான தொழில்நுட்பங்களை வழங்குவதோடு மட்டுமின்றி, அவர்களுக்கு தேவையான தன்னம்பிக்கையை ஏற்படுத்தி பல்கலை பட்டதாரிகள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும்.பி.எப்.,டெக் (இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப பட்டபடிப்பு) மூன்று ஆண்டுகள், ஆறு பருவங்களில்(செமஸ்டர்) பாடங்கள் நடத்தப்படும். 160 பேர் இப்பட்ட படிப்பில் சேர்ந்துள்ளனர். இப்பட்ட படிப்பில் சேர குறைந்தபட்ச கல்வித்தகுதியாக பத்தாம் வகுப்பில் படித்திருந்தால் போதுமானது. 30வயதுக்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே இப்படிப்பில் சேர முடியும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலையின் கீழ் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் செயல் படும் 10 கல்லூரிகள், 36 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 14 வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாகவும் பாடத்திட்டங்கள் வழங்கப்படும். தமிழ்நாடு வேளாண் பல்கலை மையங்களின் மூலம் விவசாயிகள் பாடங்களை கற்றுக்கொள்ளலாம்.

18 முதல் 30 வயதுக்குட்பட் டோர் இப்படிப்பில் சேர இயலாது. படிப்பு முடித்தவுடன் வேலைவாய்ப்புக்காக பயன்படுத்துவதை தவிர்க்கவே வயது வரம்பு உள்ளது. விவசாயிகள் இப்பட்ட படிப்பால் விவசாயத்தை மேம்படுத்தவும், அவர்களுக்குள் பல்கலை பட்டதாரிகள் என்ற நம்பிக்கையை விதைக்கவும், வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் இப்படிப்பு துவக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் விவசாயத் துறையில் உள்ள நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடைவதில்லை. ஏழு சதவீதத்தினர் மட்டுமே நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர்.

இப்பட்ட படிப்பு விவசாயிகள் அனைவரும் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு விஞ் ஞான ரீதியான தீர்வுகளையும், வழிமுறைகளையும் கொண் டுள்ளது.  இனிவரும் ஆண்டுகளில் தமிழகத்தின் உணவு உற்பத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இப்பட்ட படிப்பு ஒரு சிறந்த கருவியாக இருக்கும். இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.பல்கலை தேர்வு கட்டுப்பாட்டாளர் சந்திரசேகரன், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல் வர் ஜெயபால், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் குமார், வேளாண் இன்ஜி., கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் சந்தானபோஸ் உள்பட விவசாயிகள் பலர் விழாவில் பங்கேற்றனர்.பல்கலை திறந்தவெளி மற்றும் தொலைதூர க் கல்வி இயக்கத்தின் உதவி பேராசிரியர் குரு நன்றி கூறினார்.

**அடுத்தாண்டு கடன் வழங்க இலக்கு "நபார்டு' திட்ட அறிக்கையில் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2010,00:17 IST

திருப்பூர் : "திருப்பூர் மாவட்டத்தில், வரும் நிதியாண்டில் (2011-12) 5,103 கோடி ரூபாய் அளவுக்கு வங்கிகள் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது,' என, "நபார்டு' வங்கி திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது."நபார்டு' வங்கி சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள

2011-12ம் நிதியாண்டுக்கான திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் நிகழ்ச்சி, திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. திட்ட அறிக்கையை, கலெக்டர் சமயமூர்த்தி நேற்று வெளியிட, ரிசர்வ் வங்கி மாவட்ட முன்னோடி அதிகாரி விஜயகுமார் பெற்றுக்கொண்டார்.

"நபார்டு' வங்கியின், திருப்பூர்-ஈரோடு மாவட்ட உதவி பொது மேலாளர் சந்தானம் பேசியதாவது: திருப்பூர் மாவட்டத்தின் உள்கட்டமைப்பு, எதிர்கால வளர்ச்சி திட்டங்கள், அரசின் பல்வேறு கொள்கை முடிவுகள் அடிப்படையில், திட்ட அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்படுகிறது. நிறுவனங்கள் செயல் பாடு, மாவட்ட மண்டல மற்றும் மாநில அளவிலான வங்கிகள், அரசுத்துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் அதற்காக ஆலோசனை பெறப்படுகிறது.வரும் 2011-12ல் 5,103 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடனுதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, விவசாயத்துக்கு 1,139 கோடி ரூபாய் (22.4 சதவீதம்); தொழில் துறைக்கு 3,355 கோடி ரூபாய் (65.7 சதவீதம்), முன்னுரிமை கடன்களுக்கு 609 கோடி ரூபாய் (11.9 சதவீதம்) ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டை காட்டிலும், வரும் நிதியாண்டில் திருப்பூர் மாவட்டத்தில் 8.5 சதவீதம் அளவுக்கு கூடுதலாக கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள், விவசாய கடன் அட்டை மூலமாக வங்கிகளில் கடன் வாங்கவும், விதை பண்ணை, சிறுபாசன திட்டங்கள், ஆடு, மாடு, பால் உற்பத்தி மற்றும் வினியோகத்தை பலப்படுத் தவும், தோட்டக்கலை பயிர்கள் போன்றவற்றுக்கு முன் னுரிமை அளித்து திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தின் வளர்ச்சி பணிகளுக்கு உதவும் வகையில், "நபார்டு' வங்கி இதுவரை 1,115 ஊரக உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு, 291 கோடி ரூபாய் அளவுக்கு நிதியுதவி செய்துள்ளது. வரும் காலங்களிலும், இதேபோல் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும், என்றார். டி.ஆர்.ஓ., கஜலட்சுமி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன் உட்பட அதிகாரிகளும், வங்கி மேலாளர்களும் பங்கேற்றனர்.

**கிணத்துகடவில் தொடர் மழை : தக்காளி சாகுபடி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2010,01:01 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தக்காளி சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.கிணத்துக்கடவு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருவதால், மழைநீர் நிலத்தில் தேங்கி நிற்கிறது. இதனால், தக்காளி செடிகள் அழுகிவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் சில கிராமங்களில் மழைநீர் வடிந்துள்ள போதிலும், தக்காளி செடிகள் கருகிய நிலையில் காணப்படுகிறது.  இதில் உள்ள தக்காளிகள் மட்டுமே பறிக்க முடியும். பின்பு தக்காளி செடிகளை அழித்துவிட்டு, புதிதாக தக்காளி சாகுபடி செய்யப்படவேண் டும். இன்னும் சில கிராமங்களில் தக்காளி நாற்று விடப்பட்டுள்ளது. இப்பகுதியிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தக்காளி சாகுபடி முழுமையாக பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள் ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில், ""கடந்த ஆடி மாதத்தில் தக்காளி நடவு செய்யப்பட்டது. இதில் இருந்து 45 நாட்கள் கழித்து தக்காளி காய்ப்புக்கு வந்தது. இதில் இருந்து ஒரு காய்ப்பு திறனில் இருந்து மட்டுமே தக்காளிகள் பறிக்கப்பட்டது. இச்செடிகளில் மூன்று காய்ப்பு திறன் வருவது வழக்கம். ஆனால் இம்முறை மழை தொடர்ந்து பெய்ததால், இரண்டு காய்ப்பு திறன் பாதிக்கப் பட்டு தக்காளி செடிகள் அழிந்துள்ளன.ஒரு ஏக்கர் நிலத்தில் தக்காளி சாகுபடி செய்வதற்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஒரு ஏக்கருக்கு மட்டுமே குறைந்தபட்சம் 15 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது'' என்றனர்.

**ராஜராஜன் சாகுபடி முறையில்அதிக மகசூல் பெறுவோருக்கு பரிசு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2010,01:19 IST

மதுரை:""ராஜராஜன் சாகுபடியில் அதிகமகசூல் பெறும் விவசாயிகளுக்கு பரிசு வழங்கப்படும்,'' என கலெக்டர் காமராஜ் தெரிவித்தார்.மதுரை கிழக்கு யூனியன் பொருசுபட்டியில் நவீன தட்டுமுறை நாற்றங்கால் தயாரிப்பு இயந்திரம் மற்றும் நடவு இயந்திரம் செயல்முறை விளக்கம் நடந்தது. கலெக்டர் சி.காமராஜ் தலைமை வகித்தார்.

விவசாயிகளுக்கு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து விவசாய உதவி இயக்குனர் எஸ்.கனகராஜ் விளக்கினார்.கலெக்டர் கூறியதாவது: விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளது. இதற்கு தீர்வு காணும் வகையில் இயந்திரங்கள் அறிமுகமாகியுள்ளன. இவை ஒரு ஏக்கரில் 40 நிமிடங்களில் நெல் நடவு செய்கின்றன. ஐந்தே நிமிடங்களில் தட்டுமுறை நாற்றங்கால் அமைக்கின்றன.

செம்மை நெல் சாகுபடி என்னும் ராஜராஜன் 1000 சாகுபடி முறையில் இந்த ஆண்டு 26 ஆயிரம் ஏக்கர் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறையால் ஒரு எக்டேரில் 7 டன் நெல்மகசூல் 9 டன் என அதிகரிக்க வாய்ப்புள்ளது. இம்முறையில் பயிரிட்டு சாதனை படைக்கும் விவசாயிகளை யூனியனுக்கு 3 பேர் தேர்வு செய்து 4 ஆயிரம் ரூபாய் பரிசளிக்க உள்ளோம்.விவசாயிகள் சீசனுக்கு தகுந்தவாறு காய்கறிகளையும் அதிகம் பயிரிட வேண்டும். கரும்பு உற்பத்தி குறைந்து வருகிறது.

அதிக இடைவெளியில் கரும்பை நட்டு, சொட்டுநீர்ப் பாசனம் மூலம் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கலாம். இதற்கு ஆறுகோடி ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மானியம் எந்தெந்த பயிருக்கு எவ்வளவு உள்ளது, யாரை அணுகி பெறலாம் என்ற விபரம் குறித்து விரைவில் கையேடு வெளியிடப்பட உள்ளது என்றார்.இதில் இணைஇயக்குனர் சங்கரலிங்கம், துணை இயக்குனர்கள் சேவுகப்பெருமாள், சம்பத்குமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெபசிங்ஞானதுரை, உதவி இயக்குனர்கள் மனோரஞ்சிதம், சாரநாத்பாபு, வடிவேல்குமார், மக்கள் தொடர்பு அலுவலர் அண்ணா கலந்து கொண்டனர்.

**உரங்களுக்கு சில்லரை விலை நிர்ணயம்.**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2010,02:37 IST

மதுரை : அரசின் புதிய உரக்கொள்கைப்படி, சத்துக்களின் அடிப்படையில் உரங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. யூரியா அல்லாத பிற உரங்களுக்கு, நிறுவனங்களே சில்லரை விலை நிர்ணயிக்கும். அதில் நிறுவனங்களிடையே வித்தியாசம் இருக்கும். தமிழகம் முழுவதும் யூரியா விலை ஒரே மாதிரி இருக்கும். சில்லரை விற்பனை விலை, அரசு மானியம் உர மூடையில் குறிப்பிடப்பட்டிருக்கும். அதற்கு மேல் விற்பனை செய்தால், உரக்கட்டுப்பாடு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

சில்லரை விலை (50 கிலோ மூடை): யூரியா-ரூ.,276.12 காசு; பொட்டாஷ் (ஆர்.சி.எப்.,ஜூவாரி, ஐ.பி.எல்.,)- 262.86; டி.ஏ.பி.,(இப்கோ)-516.85; டி.ஏ.பி.,(ஆர்.சி.எப்., ஜூவாரி, ஐ.பி.எல்.,-சி.எப்.எல்.,)- 517.40; சூப்பர் பாஸ்பேட்-116.40; 20:20:0:13 (பாக்ட்)-358.54; 20:20:0:13 (ஸ்பிக்)-368.94; 20:20:0:13 (சி.எப். எல்.,)- 358.54; 16:20:0:13 (சி.எப்.எல்.,)-336.70; 10:26:26 ( சி.எப்.எல்.,)- 405.44; 15:15:15 (ஆர்.சி.எப்.,)-297.49; 28:28:0 (சி.எப்.எல்.,)- 430.61.

உரக்கடைகளில் உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு செய்தனர். குறைபாடுடைய யூரியா 83.400, பொட்டாஷ் 5.750, அமோனியம் சல்பேட் 1.100, மாங்கனீஸ் சல்பேட் 5.200 மெட்ரிக் டன், மேசெட் 263, ரோகார் 43.5, எண்டோசல்பான் 7.750, டாட்டாபென் 9.900 லிட்டர் உட்பட பல்வேறு பூச்சிமருந்துகள், உரங்கள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆய்வு தொடரும் என கலெக்டர்காமராஜ் தெரிவித்துள்ளார்.

**அடர் நடவு முறையில் கொய்யா சாகுபடிக்கு பரிந்துரை : மகசூல் அதிகரிக்குமென அதிகாரிகள் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2010,00:42 IST

விழுப்புரம் : மகசூலை அதிகரிக்க அடர் நடவு முறையில் கொய்யா சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு தோட் டக்கலைத் துறையினர் பரிந்துரை செய்துள்ளனர். ஏழைகளின் ஆப்பிள் என அழைக்கப்படும் கொய்யா ஆண்டு முழுவதும் காய்க்கும் தன்மை உடையது. பழ பயிரான இது அனைத்து வகை மண் ணிலும் எளிதில் வளரும் தன்மை கொண்டது.

வெப்ப மண்டல பயிரான கொய்யா பயிர் மா, வாழை, ஆரஞ்சு, ஆப்பிள் பழங்களுக்கு அடுத்ததாக 5ம் இடத்தில் உள்ளது. ஆப்பிள் பழத்திற்கு நிகரான சக்தி கொண்ட கொய்யா பழத்தில் உள்ள அதிகப்படியான "சி"  வகை சத்து  ஜலத்தோஷ நிவாரணியாகவும், மலச் சிக் கலை தீர்க்கக் கூடியதாகவும் உள்ளன. அதிக பயன் மிக்கதான கொய்யா சாகுபடியை அதிகரிக்க தோட்டக்கலை துறை மூலம் பல தொழில் நுட்பங்களை பயன்படுத்தி சாகுபடியை அதிகரித்து வருகின்றனர்.

சாதாரண நடவு முறையில் 5 முதல் 6 மீட்டர் இடைவெளியில் நடவு செய்வதால் ஏக்கருக்கு 111 மரக் கன்றுகள் மட்டும் நடவு செய்யப்பட்டு 10 மெட்ரிக் டன் மகசூல் பெறும் நிலை தற்போது உள்ளது. ஆனால் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப கொய்யாப் பழத்தின் அதிகப்படியான தேவையை கருத்தில் கொண்டு 2 முதல் 3 மீட்டர் இடைவெளியில் அடர் நடவு முறையில் சாகுபடி செய்வதால் ஏக்கருக்கு ஆயிரம் செடிகள் நடவு செய்வது மூலம் ஆண்டுக்கு 16 மெட்ரிக் டன் மகசூல் பெறலாம்.

மேலும் சாதாரண நடவு முறையில் கொய்யா மரங்கள் அதிகமாக உள்ள இடைவெளியில் தழைத்து வளர நீண்ட காலத்தை எடுத்துக் கொள்கிறது. இவ்வாறு தழைத்து வளரும் கொய்யா மரம் சூரிய வெளிச்சம், நீர் மற்றும் பயிர் சத்துக்களுக்கு  போட்டியிடும் சூழ்நிலை உருவாகி மகசூல் குறைய காரணமாக உள்ளது. ஆனால் 2 முதல் 3 மீட்டர் இடைவெளியில் கொய்யா செடிகளை சாகுபடி செய்யும் போது பயிர்களுக்கு தேவையான சூரிய வெளிச்சம், நீர், பயிர் சத்துக்களுக்கு போட்டியிடும் தன்மை முற்றிலும் குறைந்து விடுகின்றன.

மேலும் பாரம்பரிய முறையில் ஊடு பயிர் சாகுபடிக்கு தேவைப்படும் அதிக கூலியாட்களுக்கான செலவினமும் இல்லாமல் நிலத்தின் அனைத்து பகுதிகளையும் பயன்படுத்தி மகசூல் தரக்கூடியதாக அடர் நடவு சாகுபடி முறை உள்ளது. மேலும் அடர் நடவு முறையில் கொய்யா சாகுபடி செய்வதால் குறைவான இடத்திலிருந்து அதிகமாக மகசூல் கிடைக்கிறது. மேலும் களை எடுத்தல், பக்க கன்றுகளை அகற்றுதல் போன்ற பணிகள் குறைவதால் கூலியாட்கள் குறைந்து செலவும் மிச்சமாகின்றன. பழங்களின் உற்பத்தி செலவினமும் கனிசமான அளவு குறைகிறது. எனவே கொய்யா சாகுபடி செய்ய ஆர்வமுள்ள் விவசாயிகள் பாரம்பரிய கொய்யா சாகுபடி முறைகளை தவிர்த்து அடர் நடவு முறையில் சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறலாம்.

மேலும் அமர்பாலி, மல்லிகா, நாசரி போன்ற ஒட்டு ரக மாங்கன்றுகளை 3 முதல் 5 மீட்டர் இடைவெளியிலும், கோ 3, பி. கே.எம்-4 ரக சப்போட்ட கன்றுகளை 5 முதல் 6 மீட் டர் இடைவெளியிலும், வாழை கன்றுகளை 1.8 க்கு 3.6 மீட்டர் இடைவெளியிலும் நடவு செய்து கூடுதல் மகசூல் பெறலாம் என விழுப்புரம் தோட்டக்கலை துணை இயக்குனர் பன்னீர் செல்வம், கோலியனூர் உதவி இயக்குனர் வீராசாமி தெரிவித்துள்ளனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை கிடுகிடு உயர்வு 275 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல், நவ.2–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை கிடுகிடு என உயர்ந்து வருகிறது. நேற்று ஒரே நாளில் 5 காசுகள் உயர்ந்து 275 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் கொள்முதல் விலை 270 காசுகளாக இருந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை அதிரடியாக 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே, முட்டை விலை 275 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிறமண்டலம்

பிறமண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:–

ஐதராபாத் –252, விஜயவாடா, தனுகு –250, நெல்லூர், சித்தூர்– 275, சென்னை–278, மைசூர்– 269, பெங்களூர்–270, மும்பை– 277, டெல்லி–285, கொல்கத்தா– 290.

கறிக்கோழி கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.1 உயர்த்த முடிவு செய்தனர். எனவே, கறிக்கோழி கிலோ ரூ.51 ஆக உயர்ந்து உள்ளது.

முட்டைக்கோழி கிலோ ரூ.42 ஆக நீடிக்கிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

காரணம் என்ன?

தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதாலும், வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதாலும் தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை நுகர்வு பொதுமக்களிடையே அதிகரித்து உள்ளது. இதுவே, விலை உயர்வுக்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களாக முட்டை விலை கிடுகிடு என உயர்ந்து வருவதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

# நடப்பு நிதி ஆண்டில் இதுவரை வெங்காயம் ஏற்றுமதி 22 சதவீதம் சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டில் இதுவரை 10.10 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 12.99 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, ஏற்றுமதி 22.24 சதவீதம் குறைந்துள்ளது.

விலை குறைந்தது

ஜூலை–செப்டம்பர் மாத காலம் வெங்காயம் அளிப்பு குறையும் மந்த பருவம் என்பதால், உள்நாட்டில் விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையிலும், ஏற்றுமதியை குறைக்கும் வகையிலும் வெங்காயத்திற்கான ஏற்றுமதி விலையை மத்திய அரசு அதிகரிப்பது வழக்கம். இந்நிலையில், இம்மாத மத்தியில் நாட்டில் வெங்காயம் அளிப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகாராஷ்டிராவில் உள்ள லாசல்கான் பகுதியே, வெங்காயம் வர்த்தகத்திற்கான ஆசியாவின் மிகப் பெரிய சந்தையாகும். இங்கு, திங்கள்கிழமையன்று ஒரு குவிண்டால் வெங்காயம் விலை 25 சதவீதம் குறைந்து, ரூ.1,203–ஆக சரிந்தது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.1,601–ஆக இருந்தது.

ஏற்றுமதி விலை

மத்திய அரசு, நவம்பர் மாதத்திற்கு, வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 50 டாலர் குறைத்து 375 டாலராக நிர்ணயம் செய்துள்ளது. அக்டோபர் மாதத்தில் இது 425 டாலராக இருந்தது. குறைந்தபட்ச விலையை குறைக்கும்போது ஏற்றுமதி அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலிருந்து வங்காளதேசம், மேற்கு ஆசிய நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு அதிக அளவில் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

அறுவடைப் பணிகள்

தற்போது தமிழகம், ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் கரீஃப் பருவ வெங்காயம் அறுவடைப் பணிகள் விறுவிறுப்புடன் நடந்து வருகின்றன. நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (கரீஃப்+ரபி) நம் நாட்டில் 1.30 கோடி டன் வெங்காயம் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாஃபெட் உள்ளிட்ட 13 அமைப்புகள் தற்போது வெங்காயம் ஏற்றுமதி செய்து வருகின்றன. நாஃபெட் அமைப்பு குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நிர்ணயித்து வெங்காயம் ஏற்றுமதியை ஒழுங்குபடுத்தி வருகிறது. ஏற்றுமதிக்கான அனைத்து ஒப்பந்தங்களும் இந்த அமைப்பிடம் பதிவு செய்யப்பட வேண்டும்.